**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 06 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவு மதிப்பீடுகள் முறையாகத் தயாரிக்காத காரணத்தினால் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தலுக்கான செலவு விடயத்தில் ரூபா 200,000 ஆன முழுமையான ஒதுக்கமும் சேமிக்கப்பட்டிருந்தது. | இந்தப் பணம் Network Attached Storage கணனி ஒன்று கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய கொவிட் நிலைமைச் சூழ் நிலையில் சந்தையில் பொருட்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டமையால் திட்டமிடப்பட்ட Network Attached Storage கணனி முறைமைக்காக விலைமனுக்கள் கோரப்பட்ட நிறுவனங்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கம் சேமிக்கப்பட்டுள்ளது. | செலவு மதிப்பீடு முறையாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(ன)(6) பிரிவின் பிரகாரம் | அரசியலமைப்பின் 154(ன)(3) மற்றும் (4) ஆம் பிரிவுகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை | அரசியலமைப்பின் 154(ன)(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழு தனது செயற்பாடுகளைத் தீர்மானிக்க வேண்டிய போதிலும் அவ்வாறானதொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கான செயல் முறைமை ஒன்றை நிதி ஆணைக்குழு தயாரித்துள்ளது. அம்முறைமை காலத்தின் தேவைகளுக்கேற்ப திருத்தப்பட்டு அதன் பிரகாரம் நிதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. | எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டம் தயாரித்தலானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | உத்தேச ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை தயாரிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைவாளர் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சுடன் ஆலோசனை நடாத்தியதுடன் அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒரு வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் ஆரம்ப வரைவில் உள்ள சில விடயங்கள் மாற்றப்பட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக புதிய ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு உரிய வாகனமொன்று அந்த அமைச்சிற்கு ஒப்படைக்குமாறு கடந்த வருடத்தில் செப்டம்பர் 30 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் PA-0400 ஆம் இலக்க வாகனம் குழாம் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் | இந்த வாகனம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செயலாளருக்கு இந்த அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட வாகனத்தை மீண்டும் ஒப்படைத்தலானது புதிய வாகனமொன்று கிடைக்கும் வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு அலுவலகத்தின் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 08 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.. | சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்கள் தொடர்பாக அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில் 15 வெற்றிடங்கள் தொடர்பாக புதிய பட்டதாரிப் பயிற்சியாளர்கள் 10 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். ஆரம்ப நிலையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் பணிகள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |